Cambridge International AS Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Subsidiary Level

**TAMIL LANGUAGE** **8689/22**

Paper 2 Reading and Writing **October/November 2017**

**1 hour 45 minutes**

INSERT

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passages for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் பயன்படுத்தவேண்டிய பத்தி இங்கே எழுதப்பட்டு இருக்கும்.

நீ இந்த இடத்தில் எப்படி எழுதவேண்டும் என்று உன் எண்ணங்களை இங்கே எழுதலாம்.
இதைத் தேர்வு அதிகாரி பார்க்க மாட்டார்.

This document consists of **3** printed pages and **1** blank page.

DC (KS) 155292
© UCLES 2017

CAMBRIDGE International Examinations

**[Turn over**

https://xtremepape.rs/

## பகுதி 1

கட்டுரை **ஒன்றைப்** படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

உலகில் அரைவாசிக்கும் மேற்பட்ட மக்கள் நகரத்தில் வசிக்கின்றனர். நகரத்தில் வாழ்வது என்பது சிக்கல்கள் மிக நிறைந்த ஒரு விடயமாகும். முக்கியமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நகரமயமாக்கல் என்பது அரசுக்குச் சவாலாக அமைந்த ஒரு விடயமாக உள்ளது. மும்பாயின் நெருக்கடியான சாலையொன்றில் 35 வருடங்களாகத் தங்கியிருக்கும் மீரா சிங் கருத்துத் தெரிவிக்கும்போது, 'காலையில் எழுந்த நேரத்திலிருந்து சுற்றிவரவுள்ள ஓசைகளுக்குப் பழக்கப்படுத்தப் பழகிவிட்டோம். அதிகாலையிலேயே கோயில்களிலிருந்து ஒலிபெருக்கியில் பக்தி கீதம் சுற்றுச் சூழலை விழிப்படையச் செய்யும். அதனைத் தொடர்ந்து இருள் விலகும் நேரத்தில், பறவைகள் கூடுகளை விட்டுப் புறப்படும் சமயத்தில் தண்ணீரின் பாவனையின் சத்தம் அனைத்து வீடுகளிலும் கேட்கும். அதனைத் தொடர்ந்து அனைத்து வீடுகளிலிருந்தும் மக்கள் வெளிவர ஆரம்பிப்பார்கள். இதன்பின்னர் ஆரம்பிக்கும் வாகனங்களின் ஓசையும் புகை மணமும் தினம் அனுபவிக்க வேண்டிய தலைவலிகளாக அமையும்' என்று கூறினார்.

கிராம வாழ்க்கையிலிருந்து நகர வாழ்க்கைக்கு மாறுபவர்களுக்கு நகர வாழ்க்கை பல் வகையிலும் மாறுபட்டதாக அமையும். தொழில் வாய்ப்புக்காகச் சேலத்திலிருந்து சென்னைக்குத் தொழில் மாற்றம் பெற்றுச் சென்ற திவாகரன் தனது கருத்தைத் தெரிவிக்கும்போது, 'நகர வாழ்க்கைக்கு மாறுவது என்று முடிவெடுத்த சமயத்திலிருந்து எனது வாழ்க்கை மாற்றத்திற்கு உட்பட்டது. நகர வாழ்க்கையின் ஆரவாரம் என்னைத் தூங்க விடாமல் செய்தது. அனைவரும் சுயநலம் கொண்டவர்களாக எனக்குத் தெரிந்தனர். அதனால் எவரும் நட்புக் கொள்வதற்கு உகந்தவர்களாக இருக்கவில்லை. நகரில் நடந்த வன்முறைகள் என்னை இரவில் நடமாட விடாமல் செய்தன. இவை காரணமாக எனக்கு ஏற்பட்ட உளவியல் பாதிப்பானது நகர வாழ்க்கைக்கு என்னைப் பழக்கப்படுத்திக் கொள்வதற்குச் சில வருடங்களை எடுக்க வைத்தது' என்று கூறினார்.

பொது மக்கள் மட்டுமல்லாமல் அரசியல் உயர் அதிகாரிகளும் நகரமயமாக்கலினால் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். நீர்பாசனத்துறையில் தொழில் புரியும் பூஜா மொண்டால் கருத்துத் தெரிவிக்கும்போது, 'வறட்சியான காலங்களில் நகரப்பகுதிகளுக்கு நீர் வழங்கல் மிகவும் சிரமமான காரியமாகும். காலையில் நான்கு மணித்தியாலங்களுக்கும் மாலையில் நான்கு மணித்தியாலங்களுக்கும் நீர் வழங்குவதற்கே நீர் போதாமல் உள்ளது. மழைக் காலங்களில் கால்வாய்கள் அடைத்து வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. இவ்வாறு தேங்கும் நீரானது கோடைக் காலத்திலும் வடிகால்கள் இல்லாது பல வீதிகளிலும் தேங்கி நிற்கின்றது. இவ்வாறு தேங்கும் நீரினால் நுளம்புகள் (கொசுக்கள்) பரவி மக்களுக்குப் பல விதமான நோய்கள் ஏற்படுகின்றன. அத்துமீறிய குடியேற்றம் இவற்றிற்குரிய பிரதான காரணமாக உள்ளது' என்று கூறினார்.

நகரப் பகுதிகளை நிர்மாணிப்பது, புனரமைப்பது மற்றும் பாதுகாப்பது என்பது அரசுக்குக் கடினமான காரியமாகும். எவ்வளவு சவால்கள் இருந்த போதிலும் நகர வாழ்க்கை பலருக்கும் நன்மை பயப்பதாகவே உள்ளது. பங்களூரில் உயர் கல்வி கற்கும் சேரன் கருத்துத் தெரிவிக்கும்போது, 'இந்த நகர வாழ்க்கை எனக்கு மிகவும் பிடிக்கும். நண்பர்களூடாக பல்வேறுபட்ட மக்களோடும் அவர்களது கலாச்சாரத்துடனும் கலக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. போக்குவரத்து வசதிகள் காரணமாக, சில நிமிடங்களிலேயே பஸ்ஸில் ஏறி நண்பர்களைச் சந்திக்கக்கூடியதாக இருந்தமை எனக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது. இவையனைத்திற்கும் மேலாகத் தொழில் நுட்ப ரீதியாக நகரிலுள்ள வசதிகள் எனது கல்விக்கு மிகவும் உதவியாக இருந்தன' என்று கூறினார்.

© UCLES 2017

https://xtremepape.rs/

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

### கட்டுரை 2

நகர வாழ்க்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாகக் கிராம வாழ்க்கை அமையும். நகர வாழ்க்கைக்கு வெளியில் குறைந்த சனத்தொகையுடன் சிறு குடியிருப்புகளாக அமைந்த புவியியல் நிலப்பகுதிகளைக் கிராமங்கள் என்று கூறுவார்கள். கிராம மக்கள் அவர்களுக்கே உரிய உடை, உணவு, உறைவிட ரீதியான பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள். நெரிசல் மிக்க நகர வாழ்க்கையை விரும்பாதவர்களுக்குக் கிராம வாழ்க்கையானது அமைதி மிக்கதாகவும் மன மகிழ்ச்சியைத் தருவதாகவும் இருக்கும். நகரங்களில் போன்று அல்லாது கிராமங்களில் அபிவிருத்திகள் அரசினால் மெதுவாகவே செய்யப்படும். காஞ்சிபுரத்திலுள்ள கீழம்பி என்ற கிராமத்தில் வசிக்கும் பெருமாள் கருத்துத் தெரிவிக்கும்போது, 'தொலைக்காட்சி மற்றும் ரேடியோ போன்ற பொழுதுபோக்கு உபகரணங்களைப் பயன்படுத்தக்கூடியதாக மின்சார வசதிகள் எனது கிராமத்தில் ஏற்படும் என்பது கனவாகவே இருந்தது. கீழம்பியிலுள்ள வீடுகளும் வர்த்தக நிறுவனங்களும் மருத்துவ சாலையும் மின்சாரத்தைப் பெறும் என்பதை எவரும் நினைத்துப் பார்க்கவில்லை. தற்போது மின்சாரப் பாவனையோடு நகர வாழ்க்கையானது கீழம்பிக்கு வந்துவிட்டது. தொலைக்காட்சி மூலமாக உள்ளூர் சரக்குப் பொருட்களுடைய நியாய விலைகள் எனக்குத் தெரிய வருகின்றன. தகவல்கள் அறிய நான் 64 கிலோ மீட்டர்கள் தூரத்திலுள்ள நகரத்திற்குப் பிரயாணம் செய்யத் தேவையில்லை.' என்று கூறினார்.

அதே கிராமத்தில் உள்ள சிறிய மருத்துவசாலையில் தொழில் புரியும் தாதியொருவர் கருத்துத் தெரிவிக்கும்போது, 'மெழுகுத் திரிகள் அல்லது மண்ணெண்ணை விளக்குகள் வெளிச்சத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் இரவு நேரங்களில் பிள்ளைப்பேறு மிகவும் கடினமானதாக இருந்தது. உபகரணங்களைச் சுத்தப்படுத்துவதற்கான சுடுநீரைப் பெற்றுக் கொள்வதற்காக நெருப்படுப்பு பயன்படுத்தப்பட்டது. மருந்துகளைச் சேமித்து வைப்பதற்கான குளிர்சாதனப்பெட்டி இருக்கவில்லை. ஆனால் தற்போது மின்சார வசதிகள் காரணமாக மருத்துவசாலை நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.' என்று கூறினார்.

கிராம வாழ்க்கையானது முதியவர்களுக்கும் நகர வாழ்க்கையிலிருந்து விலக விரும்புபவர்களுக்கும் சிறந்ததாகத் தோன்றும். இளையவர்கள் பலர் கிராம வாழ்க்கை பற்றி வேறு விதமான கருத்தைக் கொண்டவர்களாக இருப்பார்கள். தனது கிராம அனுபவம் பற்றி அரன் எனும் மாணவன் கூறும்போது 'கிராமத்தில் சினிமாவோ நாடக அரங்கங்களோ இருக்காதது ஓய்வு நேரத்தைக் கழிப்பதில் சிரமங்களை உண்டுபண்ணியது. பத்திரிகைகளின் வருகை குறைவாக இருந்ததோடு சட்டலைட் மற்றும் கேபிள் தொலைக்காட்சி வசதிகள் இல்லாதது உலக நடப்பிலிருந்து என்னை விலக்கி வைத்தது. நவீன தொழில்நுட்ப, தொலைத்தொடர்பியல் வசதிகள் கொண்ட இன்றைய காலகட்டத்தில் கணினியுடனான இணைப்பு குறைவாக இருந்தது. அனைவரும் இரவு எட்டு மணியளவில் படுக்கைக்குப் போவது முழு உலகமும் அடங்கிய உணர்வை எனக்குத் தரும்.' என்று கூறினார்.

எவ்வாறாயினும் கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஆன்மீகவியலாளர்கள் போன்றோர்களுக்கு கிராமம் எப்போதும் மகிழ்ச்சியளிப்பதாகவே உள்ளது. பிரபல கவிஞரான பிரியன் கருத்துத் தெரிவிக்கும்போது 'கிராமத்திலுள்ள புல்நிலங்கள், ஆறுகள், குளங்கள், விவசாய நிலங்கள் போன்ற நில அமைப்புகள் எனது கற்பனைக்கு உதவுவனவாக அமையும். சிறுவர்கள் மின்மினிப் பூச்சிகளை விரட்டுவது, வயல் நிலங்களில் ஓடி விளையாடுவது, தத்துவெட்டிகளைப் பிடிப்பது போன்றன எனது கவிதைகளுக்கு பொருள் கொடுப்பனவாக அமையும். கிராமத்தின் அமைதி நான் கவிதைகளைப் புனைவதற்குத் துணை புரியும்' என்று கூறினார்.



https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2017 

https://xtremepape.rs/